# LOYOLA COLLEGE (AUTONOMOUS) CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **LANGUAGES**

THIRD SEMESTER – **NOVEMBER 2024**

**UTL 3101 – GENERAL TAMIL - III**

Date: 19-11-2024 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 am-12:00 pm

| | |
|---|---|
| | **பகுதி அ - K1 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **(10 x 1 = 10)** |
| 1. | **இடம் சுட்டுக.** |
| அ | "அகல் நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை<br>நிகர் மலர் நெல்லொடு தூஉய்" |
| ஆ | "நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்<br>பீடுறும்மழை பெய்களனப் பெய்தலும்" |
| இ | "கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே<br>உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய்!" |
| ஈ | "மண்டலம் தன்னிலோர் மன்னன் இருந்தான்<br>பண்புறும் ஊழியர் பலப்பலர் இருந்தார்!" |
| உ | "வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்<br>பருவர லுழக்கு முன்னத் தொடும்பிணை பகரு மன்றே" |
| 2. | **கோடிட்ட இடத்தை நிரப்புக.** |
| அ | இன்பியலும், துன்பியலும் கலந்து எழுதப்பட்ட காப்பியம் ___________ |
| ஆ | பொய்யன் மின்;புறம் கூறன்மின்; யாரையும் ___________ |
| இ | கம்பராமாயணம் ___________ காண்டங்களைக் கொண்டது. |
| ஈ | சைவ அடியார்கள் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூல் ___________ |
| உ | *Software* என்பது தமிழில் ___________ |
| | **பகுதி அ – K2 (CO1)** |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **(10 x 1 = 10)** |
| 3. | **பொருத்துக.** |
| அ | வளையாபதி - உமறுப்புலவர் |
| ஆ | கம்பராமாயணம் - கண்ணதாசன் |
| இ | பெரிய புராணம் - சேக்கிழார் |
| ஈ | இயேசு காவியம் - கம்பர் |
| உ | சீறாப்புராணம் - தெரியவில்லை |
| 4. | **சரியா ? தவறா?** |
| அ | குடிமக்கள் காப்பியம் என்றழைக்கப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். |
| ஆ | வளையாபதி சமண சமயக் காப்பியம் ஆகும். |
| இ | தமிழுக்குக் கதி என்று கூறப்படும் நூல்களுள் ஒன்று கம்பராமாயணம் ஆகும். |
| ஈ | சைவத் திருமுறைகள் 12 ஆகும். |
| உ | உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் சடையப்ப வள்ளல் ஆவார். |
| | **பகுதி ஆ – K3 (CO2)** |
| | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு 100 சொற்களில் விடையளிக்க.** **(2 x 10 = 20)** |
| 5. | கனாத்திறம் உரைத்த காதையில் இடம்பெறும் மாலதி, தேவந்தி ஆகியோர் பற்றி எடுத்துரைக்க. |
| 6. | வளையாபதி காப்பியம் உணர்த்தும் அறக்கருத்துகளை விவரிக்க. |
| 7. | இளையான்குடி மாறநாயனார் அடியார்க்கு ஆற்றியத் தொண்டினை விளக்கியுரைக்க. |

| | |
|---|---|
| 8. | வேடனிடம் அகப்பட்ட மான் செய்த செயலினை ஆய்ந்துரைக்க. |

| | |
|---|---|
| **பகுதி இ – K4 (CO3)** | |
| | **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு *100* சொற்களில் விடையளிக்க. (2 x 10 = 20)** |
| 9. | சீவகசிந்தாமணி, குண்டலகேசி ஆகிய காப்பியங்கள் குறித்து விரித்துரைக்க. |
| 10. | வைணவர்தம் தமிழ்த் தொண்டினை எடுத்துரைக்க. |
| 11. | கீழ்க்காணும் மரபுத் தொடர்களுக்குப் பொருள் தருக.<br>அ) அகட விகடம் ஊ) கண்ணெறிதல்<br>ஆ) ஆழம் பார்த்தல் எ) காது குத்துதல்<br>இ) இலை மறை காய் ஏ) கால் ஊன்றுதல்<br>ஈ) ஈவிரக்கம் ஐ) கை கூடல்<br>உ) உச்சி குளிர்தல் ஒ) செவி கொடுத்தல் |
| 12. | நேர்காணல் குறித்த செய்திகளை விவரிக்க. |
| **பகுதி ஈ – K5 (CO4)** | |
| | **ஏதேனும் ஒரு வினாவிற்கு *250* சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** |
| 13. | "ஆதிரை பிச்சையிட்ட காதை" வழி அறியலாகும் வாழ்வியல் அறங்களை மதிப்பீடு செய்க. |
| 14. | இயேசு காவியத்தில் "எத்தனை தடவை மன்னிப்பது?", "ஊதாரிப் பிள்ளை" ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ள பாடற் செய்திகளைத் தொகுத்துரைக்க. |
| **பகுதி உ – K6 (CO5)** | |
| | **ஏதேனும் ஒரு வினாவிற்கு *250* சொற்களில் விடையளிக்க. (1 x 20 = 20)** |
| 15. | நாவல் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க. |
| 16. | "வேரில் பழுத்த பலா" நாவல் வெளிப்படுத்தும் கதைமாந்தர்கள் பண்புநலன்களையும், சமூகக் கருத்துகளையும் மதிப்பிடுக. |

**@@@@@@@**